## பாடம் - 4
## நபித்துவம்

## الدرس الرابع
## النبوة

நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் தமது நாற்பதாம் வயதை நெருங்கியபோது மக்காவுக்குப் பக்கத்திலுள்ள ஒரு மலையில் ஹிரா என்னும் குகையில் அதிக நாட்களைத் தனிமையில் கழித்தார்கள். அங்கேயே பல இரவு பகல்கள் தங்கி இறைவழிபாட்டில் ஈடுபட்டார்கள். அவர்கள் தமது நாற்பதாம் வயதை அடைந்ததும் ரமலான் மாதம் 21-ம் இரவில் ஹிரா குகையில் தங்கியிருந்த போது அவர்களிடம் ஜீப்ரீல்(அலை) வந்து 'நீர் ஓதுவீராக' எனக் கூறினார்கள். அதற்கு நபிகள் நாயகம்(ஸல்) 'எனக்கு ஓதத்தெரியாது' எனக் கூறினார்கள். ஜிப்ரீல்(அலை) இரண்டாம் முறையும் மூன்றாம் முறையும் 'ஓதுவீராக' எனக் கூறினார்கள். மூன்றாம் முறை 'படைத்த உம் இறைவனின் திருப்பெயர் கொண்டு ஓதுவீராக! கருக்கட்டியிலிருந்து அவன் மனிதனைப் படைத்தான். ஓதுவீராக! உம் இறைவன் எத்தகைய மாபெரும் அருட்கொடையாளன் எனில் அவனே எழுதுகோலின் மூலம் கற்றுக்கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றை யெல்லாம் கற்றுக்கொடுத்தான்' (96:1-5) எனக் கூறினார்கள். பின்னர் அவர்கள் சென்றுவிட்டார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் ஹிரா குகையில் தங்கியிருக்க முடியவில்லை. உள்ளம் நடுங்கியவர்களாக வீட்டிற்குத் திரும்பி கதீஜாவிடம் வந்தார்கள். 'என்னைப் போர்த்துங்கள்! என்னைப் போர்த்துங்கள்!' எனக் கூறினார்கள். வீட்டிலுள்ளோர் நபியவர்களைப் போர்த்தினார்கள். இறுதியில் பயம் அவர்களை விட்டும் நீங்கியது. பின்னர் தமக்கு ஏற்பட்டதை கதீஜாவிடம் கூறி தமக்கு ஏதும் நேர்ந்துவிடுமோ என தாம் பயந்து போய்விட்டதாகவும் கூறினார்கள். அப்போது கதீஜா(ரலி) 'அப்படியெல்லாம் ஒன்றும் ஆகாது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் ஒருபோதும் உங்களை இழிவுபடுத்த மாட்டான். ஏனென்றால் நீங்கள் சொந்த பந்தங்களுடன் இணைந்து வாழ்கிறீர்கள். ஆதரவற்றோரை அரவணைக்கிறீர்கள். வறியவர்களுக்காக உழைக்கிறீர்கள். விருந்தினரை உபசரிக்கிறீர்கள். சோதனைகளில் ஆட்பட்டோருக்காக உதவுகிறீர்கள்' எனக் கூறினார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் தமது இறைவணக்க வழிபாட்டைத் தொடர்வதற்காக மீண்டும் ஹிரா குகைக்குத் திரும்பினார்கள். தமது வழிபாடு முடிந்ததும் மக்காவுக்குத் திரும்பிச் செல்வதற்காக ஹிராவிலிருந்து இறங்கி வந்தார்கள். பதனுல்வாதி என்னும் இடத்தில் சென்று கொண் டிருக்கும் போது ஜிப்ரீல்(அலை) அவர்கள் வானத்திற்கும் பூமிக்கும் இடையே ஒரு சிம்மாசனத்தில் அமர்ந்தவர்களாகத் தோன்றினார்கள். பிறகு 'போர்த்திக் கொண்டு படுத்திருப்பவரே! எழுந்து எச்சரிக்கை செய்வீராக! உம் இறைவனைப் பெருமைப் படுத்துவீராக! உம்முடைய ஆடைகளைத் தூய்மையாக்குவீராக! அசுத்தத்திலிருந்து விலகியிருப்பீராக!' (74:1-5) என்ற வசனங்கள் இறங்கின. அதன் பின் வஹி தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

நபி(ஸல்)அவர்கள் தமது அழைப்புப் பணியைத் தொடங்கியபோது சிறப்பிற்குரிய அவர்களது மனைவி ஈமானின் அழைப்பை ஏற்றுக் கொண்டார்கள். அல்லாஹ்வை ஏகன் என்றும் தம் கணவர் நபி என்றும் சான்று பகர்ந்தார்கள். இவர்கள் தான் இஸ்லாத்தை முதன் முதலில் ஏற்றுக் கொண்டவராவார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உற்ற நண்பர் அபூபக்கரிடம் இந்த சத்தியத்தைத் தெரிவித்தபோது அவரும் எவ்விதத் தடுமாற்றமும் இன்றி ஏற்றுக் கொண்டார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் தமது தாயாருக்கும் பாட்டனாருக்கும் பின்னர் தம்மைப் பொறுப்பேற்று வளர்த்த தம் பெரிய தந்தை அபூதாலிபின் உதவிக்குப் பகரமாக அவருடைய மக்களில் அலீ என்பவரை எடுத்து வளர்த்துவரலானார்கள். அவருக்காக செலவு செய்தார்கள். இந்த நிலையில் அலீயின் உள்ளம் தெளி வடைந்து நபிகள் நாயகம் மீது நம்பிக்கை கொண்டார். இதன் பின்னர் இவர்களைத் தொடர்ந்து கதீஜாவின் அடிமை ஸைத் பின் ஹாரிஸாவும் நம்பிக்கை கொண்டார்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இஸ்லாமியப் பிரச்சாரத்தை இரகசியமாகவே தொடர்ந்து செய்து வந்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் அதை இரகசியமாக வைத்துக் கொண்டனர். ஏனெனில் அவர்களில் ஒருவரது விவகாரம் வெளியே தெரிந்து விட்டால் அவர் இஸ்லாத்தை விட்டுவிட வேண்டுமென் பதற்காக குறைஷிகள் இழைக்கும் கொடுமையான வேதனைகளுக்கு அவர் பலியாக வேண்டியது வரும்! அந்த நேரத்தில் நபித்தோழர்கள் தொழுகையையும் மற்ற வழிபாடுகளையும் நிறைவேற்ற நாடினால் இணைவைப்பவர்களுக்குத் தெரியாமல் மக்காவுக்கு வெளியே உள்ள பள்ளத்தாக்குகளுக்குச் சென்றுவிடுவார்கள்.